ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

असंख्यसुरकोटिषु प्रविलसत्स्वपि श्रीपते
त्वमेव शरणं ममेति च विहाय सर्वांश्च तान् ।
गतं शरणमद्य मां त्यजसि चेत् प्रभो त्वं तदा
भजेयमितरञ्च कं तव भवेत् ध्रुवं पातकम् ॥

அஸங்க்யஸுரகோடிஷு ப்ரவிலஸத்ஸ்வபி ஸ்ரீபதே
த்வமேவ ஶரணம் மமேதி ச விஹாய ஸர்வாம்ஶ்ச தாந் ।
கதம் ஶரணமத்ய மாம் த்யஜஸி சேத் ப்ரபோ த்வம் ததா
பஜேயமிதரம் ச கம் தவ பவேத் த்ருவம் பாதகம் ।

ஹே ஸ்ரீபதே! லக்ஷ்மீபதியான ஹே விஷ்ணோ! கோடிக்கணக்கான பல தேவதைகள் விளங்கிக்கொண்டிருந்தாலும் அவர்களை நான் பொருட்டாகக் கருதாமல் ஸகலமான பேர்களையும் விட்டுவிட்டு நீர்தான் எனக்குப் பிரபு ரக்ஷகர் என்கிற திண்ணமான எண்ணத்துடன் உம்மைச் சரணமாய் அடைந்துவிட்டேன். அவ்விதம் அடைந்த என்னை நீர் பாதுகார்க்காமல் அலக்ஷியமாக விட்டுவிட்டால் யாரைப்போய் நான் சரணாகதியாக அடைவேன்? வேறொருவருமில்லை. ஆகையால் என்னை நீர் கைவிட்டால் நம்பிவந்தவனை ரக்ஷிக்காமல் விட்டார் என்கிற தோஷம் உமக்கு நிச்சயமாக ஏற்படும்.

ஒருவன் எவ்விதக் குற்றத்தைச் செய்திருந்தாலும் அவனாக வந்து நான் உம்மைச் சரணமாக அடைந்துவிட்டேன். என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று வேண்டினால் அவனை அவசியம் ரக்ஷிக்கவேண்டுமென்று சாஸ்திரங்களும் சான்றோர்களும் முறையிடுகிறார்கள். அதற்கிணங்கவே நீரும் தசரதருக்குப்புத்திரனாக அவதரித்த ஸ்ரீராமாவதாரத்தில் உமது பத்னியிடம் பெரிதானதப்பைச்செய்த காகாஸுரனை சரணமடைந்தவுடன் பாதுகார்த்திருக்கிறீர். ஆகையால் ஹேலக்ஷ்மீபதே! அவ்விதம் யாதொரு கெட்டகாரியத்தையும் செய்யாத நான் எல்லாரையும் விட்டுவிட்டு உம்மை ரக்ஷகராக வடைந்திருப்பதால் அவச்யம் என்னைப் பாதுகார்க்கவேண்டியது உமது கடமை. அவ்விதம் நீர் செய்யாவிட்டால் சரணமடைந்தோரைக் கைவிட்டார் என்கிற பெரிய தோஷமுமக்குண்டாகும் என்று பக்தர் பிரார்த்திக்கிறார்.

சுபம்.

உபபத்திராதிபர்.

# வரதக்ஷிணை.

(158-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்விதமிருக்கும் உண்மையையறியாத சில ஜனங்கள் பால்ய விவாஹமே வரதக்ஷிணைக்குக் காரணமென்றும் அதையொழித்தால் இந்தக்கஷ்டம் உண்டாகாதென்றும் தாறுமாறாய்ப்பிதற்றுகிறார்கள். பால்யவிவாஹத்திற்கும் இதற்கும் என்ன ஸம்பந்தம்? 14வயதிலோ அல்லது 16வயதிலோ ஸ்திரீகளுக்குவிவாகம்செய்ய வேண்டுமென்றுஇவர்கள் கருதுகிறார்களேயல்லாமல்ஸ்திரீகளுக்கு விவாகமேவேண்டாமென்றுகூற இன்னும் முன்வரவில்லை. அவ்விதம் அவர்களிஷ்டப்படி நடக்குமேயானால் தற்காலம் 10, 11, 12, 13வயதுகளில் நடைபெறும்விவாஹகாலத்திற்கும் இவர்கள்கூறும் காலத்திற்கும் மத்தியில் 3, 4வருஷகாலம்தானிருக்கின்றது. முக்யகாலமான 8-வது வயதைவிட்டு 12-வது வயதுவரையில் செய்யாமலிருந்தும் பிறகு செய்யும் காலத்திலும் வரதக்ஷிணைவிடாமலிருக்கிறபோது இதிலிருந்தும் மூன்றுவயது அதிகமாக மேலே சென்றாலும் அக்காலத்திலும் இந்த நிர்ப்பந்தம் ஏன் இருக்காது? அது எப்படி விலகும்? என்பதை நம் கருணைக்கடல்கள் ஏன் சற்றுங்கவனிக்கவில்லையோ தெரியவில்லை. ஒருஸமயம் பால்யவிவாஹம் கூடாதென்பதற்கு அரசாங்கத்தில் நிர்ப்பந்தம் செய்யவேண்டுமென்று தற்காலம் முயற்சி எடுத்திருப்பதுபோல் 16-வயதான பிறகு விவாஹம் செய்யும் ஸ்திரீகளுக்கு வரதக்ஷிணைவாங்கக்கூடாதென்று ஒரு மசோதாவைப் பாஸ் பண்ணுகிறோமென்று சொல்வதும் உசிதமாகத் தோன்றவில்லை. தற்காலம் பால்யவிவாஹம் கூடாதென்பதற்கு ஒரு மசோதா. பிறகு 16 வயதாய் செய்யும் விவாஹத்தில் வரதக்ஷிணை வாங்கக்கூடாதென்று இரண்டாவது மசோதா என்கிற இந்த சிரமத்தைக்காட்டிலும் பால்யவிவாஹ மசோதாவைவிட்டு இப்பொழுது நடைபெறும் விவாஹங்களிலே

யே வரதக்ஷிணை வாங்கக்கூடாதென்று பிறகு கொண்டுவருகிற மசோதாவை முந்திகொண்டுவந்தால் சிரமும் குறைவடையும். ஒரே காரியத்திற்கு 2 தடவை அரசாங்கத்தாரையும் நிர்ப்பந்திக்க வேண்டாம் சாஸ்திர விரோதமுமேற்படாது. வைதிகர்களின் மனமும் புண்படாது. இதுதான் அறிஞர்களின் கொள்கையாகும். இவ்விதமின்றி விவாஹம் ஸ்திரீகளுக்குச் செய்யவேண்டுமென்று ஒப்புக்கொண்டால் இரண்டொருவருஷம் காலத்தைவிலக்கிப்போட்டதற்காக ஒருகாலும் இந்த சிரமம் விலகாது. இவர்கள் புத்திமான்களாயிருந்தால் ஸ்திரீகளுக்கு விவாகஸம்ஸ்காரமே வேண்டாம். அவர்களிஷ்டம்போலிருக்கலாமென்று மேனாட்டு முறையைச் சட்டபூர்வமாக நம் நாட்டிலும் ஸ்தாபித்தால்மட்டும் இவர்கள் கோரிக்கைநிறைவேறுமேயல்லாமல் பால்யவிவாகத்தை நிறுத்துவதால் அது விலகுமென்று நினைப்பது மிகவும் அறிவின்மையேயாகும். எவ்வளவோ காலமாக இந்தப் பால்யவிவாஹம் நடந்துவருகிறது ? 50வருஷங்களுக்குமுன் வரதக்ஷிணையுண்டா? அக்காலங்களில் இந்த விவாஹம் மிகவும் கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டும் அது ஏன் வரதக்ஷிணை வாங்கும்படி தூண்டவில்லை ? உலகிலுள்ள மற்றவர்களுக்கும் கொஞ்சம் புத்தியுண்டென்கிற எண்ணமில்லாமல் தமக்குத் தோன்றியதையெல்லாம் தைர்யமாய் தர்மோபதேசமாகக்கருதி வர்ணாச்ரமதர்மங்களைக் கெடுக்க முன் வந்திருப்பதை யாவரும் அறிந்தவிஷயமே. இதனால் பால்யவிவாஹத்தை வரதக்ஷிணைக்குக் காரணமெனக்கூறுவது மிகவும் தவறென்று அறிவிக்கப்படுகின்றது. இந்த வரதக்ஷிணை என்னும் கொடியவழக்கத்தை நிறுத்தவேண்டியது மிகவும் அவச்யமான கார்யம். இதை எல்லா ஜனங்களும் அவச்யம் விலக்கவேண்டுமென்பதைக்காண்பிக்கவேண்டி நன்னிலம் தாலுகா முடிகொண்டான் கிராமத்தில் விளங்கும் மிகவும் கௌரவம்பொருந்திய ஒரு பிரபு தைர்யமாக முன்வந்து 8000 ரூபாய்வரையில் வரதக்ஷிணை தன் புத்திரனுக்குக் கொடுக்கத்தயாராயிருந்தும் அதைஅங்கீகரிக்காமல் பழையகல்யாணங்களைப்போல் விமர்சையாய்ப் பெரியோர்கள் புகழும்படி கல்யாணத்தை நடத்தினர். அதற்குமுன்னும் இவ்விதமே ஒரு கல்யாணத்தை நடத்தியிருக்கிறார். இவர்களைப் போல் மற்றுமுள்ள பிரபுக்களும் கிரமமாய் முன்வந்தால் இந்தக் கஷ்டம் கூடியசீக்கிரம் விலகிவிடுமென்பதில் ஆக்ஷேபமில்லை.

ஆகையால் எல்லா ஜனங்களும் தங்களுடைய அனுஷ்டானங்களாலும் வேண்டியவர்களிடம்சொல்லி அவர்களேயும் அனுஷ்டிக்கும்படி செய்வதாலும் வரதக்ஷிணை என்னும் பேயை நம் தேசத்தை விட்டு விரட்டி ஸகல ஜனங்களேயும் கஷ்டப்படாமலிருக்கும்படி செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள். சுபம்.

உபபத்திராதிபர்.

---

# பிராம்மண்ய விமர்சம்.

(193-வது பக்கத்தொடர்ச்சி)

எந்த வித்யையும் குருமுகமாக அறியவேண்டும். பீஷ்மாசாரியர் தன்னுடைய ஆசார்யனும் பகவதம்சரூபியுமான பரசுராமனே ஜயிக்கத்தக்க பராக்ரமத்தை அடைந்திருந்தும் தன்னுடையபௌத்திரர்களான துரியோதனன் தர்மபுத்திரர் முதலிய ஸகலருக்கும் வில்வித்தையையும், சாஸ்திரங்களேயும் கற்பிக்கத் துரோணுசாரியரையும் கிருபாசாரியரையும் துருபதராஜன் தனக்கு ஆசாரியனுக அக்கினிவேசியரையும் தன்னுடைய புதல்வர்களான திருஷ்டத்துய்மனன் சிகண்டி இவர்களுக்குத் துரோணுசாரியாரையும், ஸ்ரீ கிருஷ்ணபகவான் மனுஷ்யாவதாரத்துக்கேற்றவாறு ஸாந்தீபினி ரிஷியிடம் குருகுலவாஸம் பண்ணி வித்தியாப்பியாஸம் செய்ததையும் இக்ஷ்வாகுவம்சத்தரசர்கள் ஸகலரும் வஸிஷ்ட மகரிஷியையே குலகுருவாக அடைந்திருந்ததையும் பிரஸித்தராயும், சிறந்த யோகாப்பியாஸியாயுமிருந்த ஜனகமஹாராஜனே யாக்வல்க்கிய ரிஷியிடம் சிஷ்யராகவிருந்ததையும் இன்னும் அனேக திருஷ்டாந்தங்களேயும், சாஸ்திரங்கள் மூலமாய்க் காணலாம். ஆனுல் புராணங்களேயும், தர்மசாஸ்திரங்களேயும் பிராம்மணர்கள் தங்களுக்கு அனுகூலமாக சிருஷ்டித்துக்கொண்டதாய் இக்காலத்தில் சிலர் சொல்லுகிறுர்கள். அது தவறு என்றே கீழ் சொல்லும் காரணங்களால் நன்கு விளங்கும். எந்தக் காலத்திலும் எவ்விடத்திலும் பிராம்மணர்கள் தனித்து ஏகதேசமாய் அரசாண்டதாகத் தெரியவேயில்லே. க்ஷத்திரியர்கள் மகாசூரர்களாயும், கவிகளாயும் பிரஸித்தாளாயும் இருந்திருந்திருக்கும்போது அனுவசியமாய் பிராம்மணர்களுக்கு உயர்தர யோக்கியதையை உண்டுபண்ணுவதற்கு ஸம்மதிப்பார்களா?

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ।

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ: ।

பிராம்மணன் முதலான நான்கு வர்ணங்களையும் அவரவர்களின் குணம் செய்கை முதலியவைகளோடு சிருஷ்டித்திருப்பதாய் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கிறார். இந்த யுகத்தில் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் பல பாஷை பேசுபவராயினும் முதல் வர்ணம் மட்டில் பிராமணமதமென்றே ஒரே பெயராக வழங்கப்பட்டு வருகிறது. 2, 3, வர்ணங்கள் சிலவிடங்களில் ஏராளமாயிருப்பதாகச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் எழுதினவத்திருக்கிறார்கள். நான்காவது வர்ணத்தில் அனேகம் பிரிவுகள் இருப்பதும் தவிர தாங்கள் தாங்களே யஜமான்களாக விரும்பி நிரபராதிகளான பிராமணர்களைத் தூஷிப்பதையே முக்கிய கடமையாகக்கொண்டிருக்கிறார்கள். சில பிரிவினர்கள் கொஞ்சகாலம் முன்வரையில் தாங்களும் பிராமணர்கள் என்று சொல்லி வீண்வாதம் புரிந்துகொண்டிருந்து ஸமீபத்தில் உண்டாயிருக்கும் பிராமணத்வேஷத்தால் தாங்கள் பிராமணர்கள் அல்லவென்று பிரஸித்தமாய் சொல்லி வருவதாய் கேள்வை. பிராமணஜாதி ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்டதென்றும் ஜாதிப்பிரிவினை உண்டென்றும் செய்கையினால் ஜாதி ஒருக்காலும் மாறாதென்பதையும் பற்றி சுருதி தர்மசாஸ்திர ஆதாரங்களுடன் தெளிவாக எளிய தமிழ் வசனரூபமாய் கும்பகோணம் ஸ்ரீ உ. பய, அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசார்யார் ஸ்வாமிகள் இயற்றியிருக்கும் ஜாதிதத்துவ நிரூபணம் என்னும் கிரந்தத்தில் விளக்கப்பட்டிருப்பதை வாங்கிப்படித்தால் விவரமாய் விளங்கும். ஆதலால் அதிகம் விஸ்தரித்து நாம் எழுதிவேண்டியதவசியமன்று.

## அனுக்ரஹசக்தி

अपि वज्रशताघातैः तोमरेण शरेण वा ।
कदाचित्कवचं भेद्यमभेद्याः ब्राह्मणाशिषः ॥

அபிவஜ்ரஶதாகாதை: தோமரேண ஶரேணவா ।
கதாசித்கவசம்பேத்யமபேத்யா: ப்ராஹ்மணாஶிஷ: ॥

கடினமான இரும்புக் கவசமானது திவ்யாஸ்திரம், தோமராயுதம், வஜ்ராயுதம், இவைகளால்மாத்திரம் ஒருக்கால் பிளக்கப்படும்.

பிராமணர்களுடைய ஆசீர்வாதத்தாலுண்டாயிருக்கும் கவசமானது சத்துருக்களால் பிளக்க முடியாது என்பது.

நிக்ரகசக்தி

यै: कृतस्सर्वभक्षोऽग्नि: अपेयस्स महोदधि: ।
क्षयीच सकृतश्चन्द्र: यो नष्टो विप्रकोपनात् ॥

𑌯𑍈𑌃 𑌕𑍃𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑌕𑍍𑌷𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃 𑌅𑌪𑍇𑌯𑌸𑍍𑌸𑌮𑌹𑍋𑌦𑌧𑌿𑌃 ।
𑌕𑍍𑌷𑌯𑍀 𑌚𑌸𑌕𑍃𑌤𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌯𑍋𑌨𑌷𑍍𑌟𑍋𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑍋𑌪𑌨𑌾𑌤𑍍 ।

நியாயமாய் உண்டாயிருக்கும் பிராம்மணர்களுடைய கோபத்தினாலே அக்னிக்கு ஸர்வபக்ஷணத்தையும் கங்காமிருதம்போன்ற ஸமுத்திரஜலத்தைப் பானத்துக்கு யோக்கியமில்லாததாகவும் பூர்ணபிரகாசமுள்ள சந்திரனுக்கு க்ஷயரோகத்தையும் உண்டுபண்ணப்பட்டது. பிராம்மணனுடைய கோபத்தினாலே நஷ்டத்தையடையாதவர்கள் யார் என்பது புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது.

अग्निर्दहति तेजोभि: सूर्यो दहति रश्मिभि: ।
राजा दहति दण्डेन ब्राह्मणो मन्युना दहेत् ॥

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌦𑌹𑌤𑌿 𑌤𑍇𑌜𑍋𑌭𑌿𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌦𑌹𑌤𑌿 𑌰𑌶𑍍𑌮𑌿𑌭𑌿𑌃 ।
𑌰𑌾𑌜𑌾 𑌦𑌹𑌤𑌿 𑌦𑌣𑍍𑌡𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌮𑌨𑍍𑌯𑍁𑌨𑌾 𑌦𑌹𑍇𑌤𑍍 ।

அக்னியானது தேஜஸ்ஸினாலும் சூரியன் கிரணத்தினாலும் அரசன் உக்கிரமான சிக்ஷைபண்ணுவதாலும் பிராம்மணன் கோபத்தாலும் கொளுத்துகிறானென்பது. மோக்ஷத்தைவிரும்பிய எந்தப் பிராம்மணனும் அனுவசியமாய்க் கோபத்தை உபயோகிக்கவே மாட்டான். பிராம்மண்யத்தின் மஹிமை மற்றவர்ணங்களுக்கு உரைகல்லாயும் பொறுமையில் கொல்லனின் பட்டரைக்குச் சமமாயும் சொல்லியிருக்கிறது. கோபமென்பதே எள்ளளவும்கூடாது.

பிராம்மண லக்ஷணம்.

येन केनचिदाच्छन्नो येनकेनचिदाशित: ।
यत्र क्वचन शायीस्यात्तं देवा ब्राह्मणं विदु: ॥
अहेरिव ऋणाद्भीत: संमानान्मरणादिव ।
कुणपादिव यस्त्रीभ्य: तं देवा: ब्राह्मणं विदु: ॥

𑌯𑍇𑌨𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑌾𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑍋 𑌯𑍇𑌨𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑌾𑌶𑌿𑌤𑌃 ।
𑌯𑌤𑍍𑌰 𑌕𑍍𑌵𑌚𑌨𑌶𑌾𑌯𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌅𑌹𑍇𑌰𑌿𑌵 𑌗𑌣𑌾𑌦𑍍𑌭𑍀𑌤𑌃 𑌸𑌂𑌮𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑌰𑌣𑌾𑌦𑌿𑌵 ।
𑌕𑍁𑌣𑌪𑌾𑌦𑌿𑌵 𑌚 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑍍𑌯𑌃 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ।

டாம்பீஹமற்றதாயும் மறையுரி அஜினம் முதலிய கிடைத்ததைத் தரித்துக்கொண்டு நாகரீகமற்றதும் வியாதியை உண்டுபண்ணத் தகாததாயுமிருக்கும் கிடைத்த வஸ்துக்களை உட்கொண்டும் நித்திரை வந்தவுடன் எந்த இடத்திலாவது படுத்துக்கொண்டும் கட்டனுக்கு பாம்பைக் கண்டதுபோல் பயப்பட்டும் பிறரால் தன க்குச்செய்யப்படும்வெகுமானத்தைக்கண்டு மரணத்துக்குப் பயப் படுவதுபோலும், பரஸ்திரீகளைப்பிணத்துக்கொப்பாகவும் நினைக்கு மவனையே தேவதைகள் பிராம்மணன் என்று அறிகிறார்கள். இதேமாதிரி கணக்கற்ற வசனங்களை வடமொழியிலும் தென் மொழியிலும் காணலாம். சொல்பகாலத்தில் தோன்றியிருக்கும் ஜஸ்டிஸ் பார்ட்டிகள் தவிர பழைய ராஜாக்களாவது பல ஜாதிக் காரர்களான பக்தவிஜயத்திலுள்ள தாஸர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் இவர்களாவது தாங்கள் செய்திருக்கும் கிரந்தங் களில் பிராம்மணர்களை வேதியர் என்றும் பூஜிக்கத்தக்க பூசுரர்கள் என்றும் கொண்டாடி வந்திருக்கிறார்களே தவிர தூஷித்தாவது மேற்கண்ட நியாயங்களுக்குக் கண்டனம் எழுதியாவது இருப் பதாகத் தெரியவில்லை. அந்த மஹான்களைவிட இவர்கள் எந்த விதத்தில் புத்திமான்களோ சுவாமிக்குத்தான் தெரியவேண்டும். பிறப்பிடத்தில் துவேஷிப்பது க்ஷீணத்தையே நாளடைவில் கட் டாயம் அடையும்.

अद्भ्योऽग्निः ब्रह्मतःक्षत्रं अश्मतो लोहमुत्थितम् ।
तेषां सर्वगतं तेजः स्वासु योनिषु शाम्यति ॥

𑌅𑌦𑍍𑌭𑍍𑌯𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌃𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌅𑌶𑍍𑌮𑌤𑍋 𑌲𑍋𑌹𑌮𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌸𑍍𑌵𑌾𑌸𑍁 𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌶𑌾𑌮𑍍𑌯𑌤𑌿 ।

பிர்ம்மசிருஷ்டியிலுள்ளது ஒரு காலத்தில் சில காரணத்தைக் கொண்டு நசித்துவிட்டதுபற்றி ஜலத்திலிருந்து அக்கினியையும் பிராம்மணனிடத்திலிருந்து க்ஷத்திரியஜாதியையும் கருங்கல்லி லிருந்து இரும்பையும் உண்டுபண்ணிக்கொண்டதாகச் சொல்லி

யிருக்கிறது. நெருப்பு எவ்வளவு தேஜஸ்ஸுடனிருந்தாலும் ஜலத்தில் எதிர்த்துப்பட்ட மாத்திரத்திலும், கத்தி கூர்மையுள்ள தாயினும் கருங்கல்லில் ஸம்பந்தப்பட்டவுடனும் பிரயோஜனமற்ற தாகிவிடுவது பிரஸித்தம். மற்றவிஷயத்தைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை. இரண்டு திருஷ்டாந்தங்களால் பிராம்மண த்வேஷம் அவ்வளவு குணமன்று. ராஜாங்க உத்தியோகங்களில் பிராம்மணர்களே பெரும்பாலும் இருப்பதை ஒரு காரணமாகச் சொல்லுகிறார்கள். க்ஷத்திரிய ராஜாங்கத்தில்கூட மந்திரிகளாயும் குருக்களாயும் ஸேனாதிபதிகளாகவும் இருந்து ஜனங்களுக்கு வாசாமகோசரமான உபகாரங்களைச் செய்திருக்கும் வஸிஷ்டர் கிருபாசாரி, துரோணாசாரி, அசுவத்தாமா, வித்தியாரண்ணியர் இன்னும் பிரஸித்திபெற்ற அநேகம் மஹான்களைத் தக்க ஆதாரங் களுடன் திருஷ்டாந்தமாகக் கூறக்கூடும். இவர்கள் என்ன கெடுதல் செய்திருக்கிறார்கள். எவ்வளவோ விதத்தில் பரம உப காரம் செய்திருக்கும் பெரியோர்களை ஸதாகாலமும் பூஜிக்கவேண் டியதல்லாது தூஷிப்பது நியாயமாகாது. அன்னிய ராஜாங்கம் தலையெடுக்க ஆரம்பித்தவுடன் வேறு வகையின்றி ரக்ஷிப்பாரில்லா மல் பிராம்மணர்கள் பலவிதத் தொழில்களிலும் பிரவேசித்து விட்டார்கள். இது யாருடைய அபராதமோ யோசித்துப் பார்ப் பவர்களுக்குத்தான் தெளிவாகுமேயொழிய அதிகுருகலான திருஷ்டியுள்ளவர்களுக்குப் புலப்படாது. பிர்ம்மக்ஞானத்தின் பொருட்டே பிராம்மணன் சிருஷ்டிக்கப்பட்டான் என்பது. பிரா மணன் வலதுகையில் அக்னி வசிப்பதாகவும் அதில் ஹோமம் பண்ணவேணுமென்றும் ஸாமசாகிகள் அனுஷ்டித்துவருகிறார்கள். வால்மீகிரிஷி ஆதிகாவ்யமாகிய ஸ்ரீமத்ராமாயணத்தின் பல சுருதி யில श्रोतव्यं क्षत्रियैर्द्विजात् 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍍 ॥ பிராமணன் மூலமாய் க்ஷத்திரியர்கள் கேழ்க்கவேணுமென்று சொல்லியிருக்கிறார்.

अक्षतान् विप्रहस्तेन मातृहस्तेन भोजनम् ।
पिण्डञ्च पुत्रहस्तेन देहिमे मधुसूदन ॥

𑌅𑌕𑍍𑌷𑌤𑌾𑌨𑍍 𑌵𑌿𑌪𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌮𑌾𑌤𑍃𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌭𑍋𑌜𑌨𑌮𑍍 ।
𑌪𑌿𑌣𑍍𑌡𑌂𑌚 𑌪𑍁𑌤𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌦𑍇𑌹𑌿𑌮𑍇 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 ।

ஸ்ரீ கிருஷ்ணபகவானைப்பார்த்து தர்மபுத்திரர் அக்ஷதையைப் பிராம்மணன் கையினாலும், தாயின் கையினால் இடப்பட்ட போஜனத்தையும், புத்திரனுடைய கையினால் கொடுக்கப்பட்ட பிண்டதானத்தையும் கிடைக்கும்படி அநுக்ரஹிக்கவேணுமென்று பிரார்த்திக்கிறார். இப்படிப்பட்ட கணக்கற்ற சுருதி ஸ்மிருதி வசனங்களால் பிரஸித்திபெற்றதும் எத்தனையோ ஜந்மம் எடுத்துக் கடைசியில் புடம் வைத்தெடுத்த தங்கம்போலும் கிடைத்த இந்த பிராம்மணஜந்மத்தை விருதாவாக்காமல் யுகத்துக்கேற்றவாறு சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் தர்மப்படி அநுஷ்டித்து மோக்ஷத்தை அடைவது தர்மமல்லவா உன்னதஸ்திதியில் இருப்பவன் கெடுவது வெகு எளிது. முள்வேலியால் சூழப்பட்ட வாழைமரமானது தன் இலை காற்றில் அலைந்து வேலியின்மீது பட்டாலும் முள்ளானது இலையில் பட்டாலும் இலைக்கே ஆபத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகிறது. ஆனதால் எவ்வளவு கஷ்டம் வரினும் பொறுமையுடன் இருப்பதே நலம். கோபத்தைக் கைக்கொண்ட விசுவாமித்திரரிஷி நெடுங்காலம் சகிக்கவொண்ணாத சிரமப்பட்டுப் பொருமையை அடைந்து உறுதியாயிருந்து கடைசியில் தன் கோரிக்கையைப் பெற்றார். யார் என்னவிதமான வசைமொழி பொரிந்து தூஷித்தாலும் இவர்களால் ஆவது ஒன்றுமில்லை. முன்காலங்களில் கொடிய அரக்கர்கள் நிரபராதிகளான பிராம்மணர்களையும மெய்மறந்து அரண்யங்களில் தவம் புரிந்த தபஸ்விகளையும் இம்ஸித்தும் கூட்டமாகக் கொலைசெய்தும் வந்ததாக சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் காண்கிறோம். அந்தக் கொடுமையைக் காட்டிலும் தக்காலம் வாயினால் இவர்கள் தூஷிப்பதால் என்ன நேர்ந்துவிடப்போகிறது.

गावो गंधेन पश्यन्ति वेदेनैव द्विजातय: ।
चारै: पश्यन्ति राजान: चक्षुर्भ्यामितरे जना: ॥

𑌗𑌾𑌵𑍋 𑌗𑌨𑍍𑌧𑍇𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑍇𑌦𑍇𑌨𑍈𑌵 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌯𑌃 ।
𑌚𑌾𑌰𑍈𑌃 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌜𑌾𑌨𑌃 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑌰𑍇 𑌜𑌨𑌾𑌃 ॥

பசுக்கள் வாஸனையினாலும் பிராம்மணர்கள் வேதங்களினாலும் ராஜாக்கள் தூதர்கள் மூலமாயும் ஸாமான்ய ஜனங்கள் கண்ணினாலும் ஸகல நடவடிக்கைகளையும் பார்க்கிறார்கள் என்று இதன் தாத்பரியம்.

**शास्त्रात् प्रवृत्तिः शास्त्रान्निवृत्तिः** ஶாஸ்த்ராத்ப்ரவ்ருத்தி: ஶாஸ்த்ராந்நி வ்ருத்தி: ।

ஸகல காரியத்திலும் பிரவேசிப்பதும் தடுக்கப்படுவதும் சாஸ்திரங்களின் அனுமதியைக் கொண்டேதான் பிராம்மணனுக்கு எட்டாவது வயதில் வேதாத்தியயனத்துக்கு யோக்கியமான காலத்தில் ரொம்ப நியமத்துடன் வைதிகஸமாஜத்தில் பரமரகசியமாய்ப் பிரதிஷ்டிக்கப்பட்ட யக்ஞோபவீதத்தைத் தரிப்பித்து அதுமுதல் ஆசிரமநியமத்தின்பேரில் யாவஜ்ஜீவம் அவனால் அது உபயோகிக்கப்பட்டுவருகிறது. இதற்கு முக்கியமந்திரம் காயத்ரீஜபம். வேதத்தின் முக்கிய பாகமாக இந்த மந்திரம் அமைந்திருக்கிறது. இந்த உபவீதத்தைப் பிராம்மணன் ஸதாகாலமும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டவன். சொற்ப அசுத்தம் நேர்ந்துவிடினும் அடுத்த நிமிஷமே இதை நிவர்த்திசெய்துவிட்டு பிரதிஷ்டைசெய்த நூதன உபவீதத்தை அவசியம் தரித்துக்கொள்ளவேண்டியது. இதைத் தரிப்பது ஒருவிதக் கட்டுப்பாடு என்று அநேகர் கருதுகிறார்களேயொழிய இதன் உபயோகம் தெரிந்திருந்தால் அதில் இரும்புசாவியைக் கோர்த்துக்கொள்வது காதில் வைத்துக்கொள்ளாமல் தரித்தவண்ணமே மலஜலாதிகளைக் கழிப்பதுபோன்றவைகளை அவர்கள் ஒருபோதும் செய்யமாட்டார்கள். பிரதிதினமும் பிராம்மணன் ஸ்நானம் செய்தவுடன் ஸ்நானாங்க தர்ப்பணங்களுக்கும் வஸ்திரநிஷ்பீடனத்துக்கும் இந்த யக்ஞோபவீதம் உபயோகமாகிறது. இந்தக் கர்மாவைச் சிலர் காருண்யமென்று விட்டுவிடுகிறார்கள். உபவீதம் பிராம்மணனுக்கு நித்தியமென்று ச்ருதிமுறையிடுவதால் நித்தியகர்மாவின் அங்கமான காரியத்தில் அவசியம் உபயோகப்படவேண்டியதே. பிதுர்தர்ப்பணம், சிராத்தம் முதலிய வைதிககாரியத்தில் மட்டில் உபவீதம தேவையென்று இவர்களபிப்பிராயம் இருக்குமாயின் அன்றைய தினத்துக்குமாத்திரம் உபவிதத்தைத் தரித்துக்கொண்டு பாக்கி நாட்களில் கழட்டிவிடலாமே. இந்தக்காலத்தில் பிராம்மணர்கள் தவிர அனேகம்பேர்கள் கடையில் கிடைக்கும் ஸாமான்களோடு பூணூலையும் வாங்கியுபயோகிக்கிறார்கள். அதன் அர்த்தம் அவர்களுக்கே விளங்குவதில்லை. நாமும் உபவீதத்தை நித்தியகர்மாவில் உபயோகிக்காவிடில் இவ்வளவு சிரத்தையுடன் தரிப்பானேன்? தற்காலம் பிராம்மணர்களின் மொத்தக் கொள்

ஸபையிலும் இந்த மசோதா விஷயமாய் ஏற்பட்ட கண்டனத் தீர்மானத்தையும் கவர்னர் ஜனரல் அவர்களுக்கும் வைச்ராய் அவர்களுக்கும் அனுப்பும்படி அக்ராஸனருக்கு அனுமதிகொடுக்கப்பட்டு அவ்விதமே அனுப்பப்பட்டிருக்கிறது.

---

மறுபடியும் இவர்களே நீடாமங்கலம் சென்று இவ்வூரிலும் 3-மணிக்கு ஸ்ரீமான் ராகவாசாரியார் பி. ஏ., பி. எல்., அவர்களைப் பிரஸிடெண்டாக ஏற்படுத்தி, அவர்கள் முன்னிலையில் ஒரு பெரிய மஹாஜனங்களின் கூட்டம் கூடியது. அதிலும் இந்த மசோதாவைப் பலகாரணங்களைக்கொண்டு கூடாதென்று நன்குகண்டித்து முடிவில் சிலருடைய ஆக்ஷேபணைக்குத் தக்க விடையளித்து எல்லா ஜனங்களாலும் ஏகமனதாய்க்கண்டிக்கப்பட்டு இந்த அபிப்ராயத்தை அரசாங்கத்தார்களுக்கு அறிவிக்கும்படி ஸப்பியர்களால் தெரிவித்துக்கொண்டதற்கிணங்கி பிரஸிடெண்டவர்களும் இதைச்சட்டமாக்கக்கூடாதென்று கவர்ன்மெண்டுக்குத் தந்தி மூலம் அறிவித்திருக்கிறார்கள்.

## மன்னார்குடி.

பிறகு இவர்களே அன்றையதினம் இரவு 7-மணி சுமாருக்கு இவ்வூருக்குச்சென்று அங்கு ஹைஸ்கூலில் கூடியிருந்த பெரும் கூட்டத்தில் அண்ணுஸாமி அய்யங்கார் எஸ்டேட் மானேஜர் பிரும்மஸ்ரீ ரங்கநாதய்யங்கார் அவர்களின் அக்ராஸனத்தின்முன்னிலையில் இந்த மசோதாவைப்பற்றி ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் ப. பஞ்சாபகேசசாஸ்திரியள், கனம் ஸுந்தரராமய்யர் அவர்கள் முதலானவர்களால் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டு முடிவில் ஸகல ஜனங்களாலும் ஏகமனதாய் இந்த மசோதா சட்டமாகக்கூடாதென்று அழுத்தமாகக்கண்டிக்கப்பட்டு பிரஸிடெண்டு மூலமாக கவர்னர் அவர்களுக்கும் வைச்ராய் அவர்களுக்கும் இந்த அபிப்ராயத்தைத் தந்திமூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதம் ஆங்காங்கு மஹாஸபைகள் கூடி இந்த மசோதாவைக்கண்டித்து இதைச்சட்டமாக்கக்கூடாதென்று தாமதிக்காமல் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

வைதிகதர்மாபிமானி.